## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 18.03.2015

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 36°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 15°செ முதல் 22°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 08°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை காணப்பட்டது.

### வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (18.03.2015 முதல் 22.03.2015)

### மேற்கு மண்டலம்

மேற்கு மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில், வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 74 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 36 முதல் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 5 கி.மீ முதல் 6 கி.மீ அளவுக்கு வட கிழக்கு திசை மற்றும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ களைக்கொல்லி தெளிக்காத 20 முதல் 25 நாட்களான இறவை எள் பயிருக்கு கொத்துக்களை எடுக்கவும்.
- ✓ வெப்பநிலை அதிகரிக்க தொடங்கி விட்டதால் தென்னைக்கு ஒரு மரத்திற்கு நாளொன்றுக்கு 100 லிட்டர் வீதம் சொட்டு நீர் பாசனம் செய்ய வேண்டும்.
- ✓ வறண்ட வானிலை நிலவுவதால் வெங்காயத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்க வாய்ப்புள்ளது இதை கட்டுப்படுத்த மீத்தைல்டெமட்டான் அல்லது மோனோகுரோட்டோபாஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் 1 மிலி அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் நெல்லினை அறுவடை செய்து 13 சதவீதம் ஈரப்பதம் வரும் வரை சூரிய ஒளியில் உலர்த்தவும்.
- ✓ கிழங்கு பெரிதாகி வரும் பருவத்திலுள்ள மரவள்ளிகிழங்கிற்கு 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாசனம் செய்ய வேண்டும்.
- ✓ கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் மார்ச் 23 ம் தேதியுடன் நிறைவடைவதால் விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச

வெப்பநிலை $32^0$செ முதல் $36^0$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 42 முதல் 74 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 4 கி.மீ முதல் 7 கி.மீ ஆகவும் மற்ற மாவட்டங்களில் 15 கி.மீ முதல் 17 கி.மீ ஆகவும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள சம்பா நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.
- ✓ நெல் தரிசு பருத்திக்கு சீராக நீர் பாய்ச்சவும்.
- ✓ மாசி பட்டத்தில் விதைத்த இறவை எள்ளுக்கு விதைத்த 15 ஆம் நாள் மற்றும் 25 ஆம் நாள் பயிர்களை களைக்க வேண்டும். எள் விதைத்த 25 ஆம் நாள் ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**3. தெற்கு மண்டலம்**

தெற்கு மண்டலத்திற்க்கு உட்பட்ட மாவட்டங்களான, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $24^0$செ முதல் $25^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 41 முதல் 94 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்களில் 2 கி.மீ முதல் 8 கி.மீ ஆகவும், மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 16 கி.மீ முதல் 18 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் நன்கு வெடித்த பருத்தியை சேகரித்து, நிழலில் உலர்த்தி பாதுகாப்பான இடத்தில் சேமிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் செய்யவும். நட்ட 210 - ம் நாள் வரை சொட்டு உரநீர்ப்பாசனம் அளிக்கலாம். ஒவ்வொரு முறையும் சொட்டு உரநீர்ப்பாசனம் அளிக்கும்போது 25 கிலோ தழைச்சத்து மற்றும் 8 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் யூரியா மற்றும் வெள்ளை பொட்டாஷ் மூலமாக அளிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முதிர்ந்த மிளகாய் பழங்களை அறுவடை செய்து 12 சத ஈரப்பதத்திற்கு உலர்த்தி பாதுகாப்பான இடத்தில் சேமிக்கவும்.

## 4. மலைப்பிரதேச மண்டலம்

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 86 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. மாலைநேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ முதல் 6 கி.மீ அளவில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மிதமான மழையின் காரணமாக உருளைக்கிழங்கில் பின் இலைக்கருகல் நோய் தென்பட்டால் இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு கர்சேட் (சைமாக்சனில் 8%+மான்கோசெப்64%) 1.5 கிராம் கலந்து தெளிக்கவும்.
- ✓ லேசான மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மழை இல்லாதபோது சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ கார்போக பருவத்திற்காக கேரட் பயிரிடப்படுவதால் ஏர்லி நேன்டஸ் மற்றும் நியூ கொரோடா போன்ற இரகங்களை பயிர் செய்யவும்.

**கோழிப்பண்ணை மேலாண்மை**

**அடைக்காப்பான் இடவசதி**

- ✓ ஒரு குஞ்சுக்கு 7-10 சதுர அங்குலம் (45-65செ.மீ 2) என்ற அளவில் இடம் தேவைப்படுகிறது.
- ✓ 1.80 மீ அளவுள்ள அடைக்காப்பானில் 500 குஞ்சுகள் வரை அடைக்கலாம்.
- ✓ அதிகக் குஞ்சுகளைக் குறைவான இடத்தில் போட்டு அடைத்தால் அவை மூச்சுத்திணறி ஒன்றையொன்று மிதித்துக் கொண்டு இறக்க நேரிடலாம்.

## 5.வடமேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்க்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும், வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 4 கி.மீமுதல் 6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

✓ பகல் வெப்பம் தொடர்ந்து உயர்ந்து வருவதாலும். கோடை காலத்தின் துவக்கத்தில் இருப்பதாலும் கோழிகளிடையே லேசான வெப்ப தாக்குதலும், வெப்ப அயற்சியும் அதன் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடும் காணப்படுகிறது. இதனை எதிர்கொள்ளும் தீவனத்திலும். தண்ணீரிலும் முறையே சோடா உப்பு மற்றும் எலக்ட்ரோலைட்ஸ் சேர்த்து

வரவேண்டும், பகலில் குறிப்பாக. 11 மணி முதல் 4 மணி வரை தீவனத்தை கிளறாமல் தவிர்ப்பதால் கோழிகள் மேலும் சோர்வடையாமல் தவிர்க்கலாம்,

**வேளாண் அறிவியல் நிலையம்.**

- ✓ அறுவடை செய்யப்பட்டுள்ள சோளத்தட்டுகளை சேமித்து வைப்பது மிகவும் அவசியம், சோளத்தட்டுகளை சேமிக்கும் போது 100 கிலோ தட்டிற்கு 4 கிலோ யூரியாவினை 50 லிட்டர் தண்ணீரில் கரைத்து தட்டுகள் முழுவதும் நனையும்படி தெளிப்பு செய்யவும், அல்லது 1 லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் சாப்பாட்டு உப்பினை கலந்து தெளிப்பு செய்யலாம், இவ்வாறு பல அடுக்குகளைக் கொண்ட சேமிப்பு கிடங்கினை பாலித்தீன் சீட் அல்லது சில்க் பாலின் சீட் கொண்டு சேமித்து வைக்கலாம்,

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 33°செ முதல் 36°செ இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 26 °செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் வேலூர், மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 30 முதல் 84 சதவிகிதமாகவும், மற்ற மாவட்டங்களில் 62 முதல் 78 சதவிகிதமாகவும் காற்றின் வேகம் 6 கி.மீ முதல் 12 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கால்நடைகளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதான் மூலம் வெப்பதாக்கத்திலுருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- ✓ கத்தரி மற்றும் தக்காளி செடிகளில் காணப்படும் சாறு உறுஞ்சும் பூக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசலை தெளிக்கவும்..

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34$^0$செ முதல் 35$^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23$^0$செ முதல் 24$^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 71 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ முதல் 12 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நன்செய் மற்றும் படுகை நிலங்களில், வாழை இரகங்களான பூவன், ரசதாளி, மொந்தன், கற்பூரவள்ளி மற்றும் நெய்பூவன் ஆகியவற்றை நடலாம்.
- ✓ வாழையில் நூற்புழுக்கள் காணப்பட்டால் இதைக் கட்டுப்படுத்த நடவின் போது கன்றுகளின் கிழங்கில் தோல்களை சீவி சேற்றுக் குழம்பில் நனைத்து அதன் மீது

*கார்போ ப்யூரான் குருணை மருந்தை ஒரு கிழங்கிற்கு 40 கிராம் என்ற அளவில் தூவி நட வேண்டும்.*

- ✓ *அன்னாசியில் சீரான பூ மற்றும் காய்ப்பிற்கு 2 சதம் யூரியா + 0.04 சதம் சோடியம் கார்பனேட் + 20 பி.பி.எம் எத்திபோன் கலவையைச் செடியின் கொண்டைப் பகுதியில் ஊற்றவும்.*

***பேராசிரியர் மற்றும் தலைவர்***
***வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்***

***த.நா.வே.ப.கழகம், கோவை.***